உ

T. 21048

கடவுள் துணை

அமிர்தசாகரமுனிவர் - அருளிச்செய்த

காரிகை

மூலமும்,
இதற்குக்குணசாகரமுனிவர்செய்த
விருத்தியுரையும்.

கொன்றைமாநகரம்-ம-ள-ள-ஸ்ரீ - முருகப்பமுதலியார்
சிரேட்ட குமாரர்

அருணாசலமுதலியார்

கன்னிவாடி
மகாராசாவின்மந்திரி
திண்டிக்கல்

முத்துவீரப்பிள்ளை

இவ்விருவர்கேட்டுக்கொண்டபடி.

மதுரைக்கல்விச்சங்கத்துத்தமிழ்த்தலைமைப்புலமை
நடாத்தியகளத்தூர்

வேதகிரிமுதலியார்

குமாரர்

ஆறுமுகமுதலியாரது

இலக்கணக்களஞ்சிய அச்சுக்கூடதில்
பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதீட்ச - ௵ - பங்குனி. ௴

ப. சிதம்பரம் பிள்ளை

காரிகை

மூலமும் உரையும்

கட்டளைக்கலித்துறை

முதலாவதுறுப்பியல்

கந்தமடிவில்கடிமலர்ப்பிண்டிக்கண்ணார்நிழற்கீ………… ……………… ❋
ழெந்தமடிகளிணையடியேத்தியெழுத்தசைசீர்………… ………………… ❋
பந்தமடிதொடையாவினங்கூறுவன்பல்லவத்தின்…… …… . . …… ❋
சந்தமடியவடியான்மருட்டியதாழ்குழலே………………… ………………… (௧)

(இதன்பொருள்.)

என்பது. காரிகைநூலுரைக்குமிடத்து நூற்பெயரும்காரணமும்
ஆக்கியோன்பெயரும் அளவும்பயனும் உணர்த்துரைக்கற்பாற்று
ஆயின் இந்நூலென்னபெயர்த்தோவெனின் பாளித்தியமென்னு
ம் பிராகிருதவிலக்கணமும் பிங்கலமென்னும் சந்தோபிசிதமும்
போலக் காரிகையாப்பிற்றாய்க் குணகாங்கியமென்னும் கருநாட
கச் சந்தமேபோல மகடூஉ முன்னிலைத்தாய் அவையடக்கமு
டைத்தாய் மயேச்சுரர் யாப்பேபோல உதாரணமெடுத்தோதி
இசைத்தமிழ்ச்செய்யுட்டுறைக்கோவையேபோலவும்அருமறைய
கத்தட்டக ஓத்தின்வருக்கக்கோவையேபோலவும் உருபவதார
த்திற்கு நீதகச்சுலோகம்போலவு முதனினைப்புணர்த்தியவிலக்கிய
த்ததாய் வேதத்திற்கு நிருத்தமும் வியாகரணத்திற்குக் காரிகை
யும் அவினயர்யாப்பிற்கு நாலடிநாற்பதும்போல யாப்பருங்கல
மென்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரமுடைத்தாகச் செய்
யப்பட்டமையால் யாப்பருங்கலக்காரிகையென்னும் பெயர்த்து
இந்நூல் யாதுகாரணமாகச் செய்யப்பட்டதோவெனின், பண்
டையோருரைத்த தண்டமிழ்யாப்பிற், கொண்டிலாதகுறியினோ
ரைக், குறிக்கொளுவுதல்காரணமாகவும், தொல்லைப்பனுவற்றுணி
பொருளுணர்ந்த, நல்லவையோரை நகுவிப்பது காரணமாகவும்,
செய்யப்பட்டது. இந்நூல் யாராற்செய்யப்பட்டதோவெனின்-
ஆரியமென்னும் பாரிரும்பவ்வத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்ப
டுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமுதசாகரரென்னும்
ஆசிரியராற் செய்யப்பட்டது. இந்நூலெவ்வளவைத்தோவெனி
ன் - ஓத்துவகையான்மூன்றும் காரிகைவகையானாற்பத்து நால்

...ம், கிரந்தவகையாற் றெண்ணூறுகிரந்தமும், இருபத்தெட் டெழுத்துமெனக்கொள்க. அவற்றுள் ஒருகிரந்தமாவது ஒற்றொழித்துயிருமுயிர்மெய்யுமாகிய முப்பத்திரண்டெழுத்தாமெனக் கொள்க. இவற்றுள் நேரசைமுதலாகிய காரிகையிருபத்தொன் றும், நிரையசைமுதலாகிய காரிகை இருபத்துமூன்றுமெனக் கொள்க. அவற்றுள் நேரசைமுதலாகிய காரிகையொன்றினுக் கெழுத்தறுபத்துநான்கு, நிரையசைமுதலாகிய காரிகையொன் றினுக் கெழுத்தறுபத்தெட்டுமெனக்கொள்க. இவ்விருதிறமும் கூட்டியுற்றது இரண்டாயிரத்துத் தொளாயிரத்தெட்டெழுத்தா மெனக்கொள்க. நேரசைமுதலாகியகாரிகையொற்றொழித்தோ ரடிக்கெழுத்துப் பதினாறு, நிரையசைமுதலாகியகாரிகையொற் றொழித்தோரடிக்கெழுத்துப்பதினேழுமெனக்கொள்க. என்னை- முதற்சீர்நான்கும்வெண்டளைபிழையாக், கடைச்சீரொன்றும்வி ளங்காயாக,நேர்பதினாறே நிரைபதினேழென், றோதினர்கலித்து றையோரடிக்கெழுத்தேஎன்றாராகலின் இந்நூலாற்பயன்யாதோ வெனின் யாப்பாராய்தல்பயன் - யாப்பாராயவே-பா-தாழிசை- துறைவிருத்தங்களாலாக்கப்பட்ட அறம்பொருளின்பம் வீடெ ன்னுமிவற்றின் மெய்ம்மையறிந்து விழுப்பமெய்தி இம்மைமறு மை வழுவாமை நிகழ்வாராதலின் இருமைக்கு முறுதிபயப்பது யாப்பெனக்கொள்க. யாப்பெனினும் பாட்டெனினுந் தூக்கெ னினுந் தொடர்பெனினுஞ் செய்யுளெனினுமொக்கும். என்னை- யாப்பும் பாட்டுந் தூக்குந் தொடர்புஞ்செய்யுளே, நோக்கிற்றெ ன்பர் நுண்ணியோரே. எனவும் - எழுத்தசைசீர்தளையடிதொ டைதூக்கோ, டிழுக்காநடையதியாப்பெனப்படுமே. என்றா கலின் இந்நூல் உறுப்பியலும் - செய்யுளியலும் - ஒழிபியலும்- என மூவகைப்படும். அவற்றுள் இவ்வோத்தென்னபெயர்த்தோ வெனின்-எழுத்தும்-அசையும்-சீரும்-தளையும்-அடியும்-தொடை- யும் என்னுமாறுறுப்பினையும் உணர்த்திற்றாகலின் உறுப்பியலெ ன்னும்பெயர்த்து இவ்வோத்தினுள் இத்தலைக்காரிகை என்னுத லிற்றோவெனின் சிறப்புப்பாயிரமுணர்த்துதனுதலிற்று. என்னை- வணக்கமதிகாரமென்றிரண்டுஞ்சொல்லச் சிறப்பென்னும் பாயி ரமாம். தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளும், மெய்தவுணா ப்பதுதற்சிறப்பாகும். என்றாராகலின் - கந்தமடிவில் தாழ்குழ லே. எ-து. முருகுவிரியுமொய்ம்மலரசோகின்கீ, ழருகன்றனதடி வணங்கி. எழுத்தும்-அசையும்- சீரும்- தளையும்- அடியும்- தொ டையும்- பாவும் - பாவினமுமாமாறுரைப்பன். தளிர்புரையுஞ் சிறுமெல்லடித் தகைநெடுங்குழற்றையலாய். என்றவாறு.இஃது பொழிப்புரையெனக்கொள்க. என்னை-பொழிப்பெனப்படுவது

பொருந்திய பொருளைப், பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே-
என்றாராகலின் - கந்தமடிவிலிணையடியேத்தி. என வணக்கஞ்
சொல்லப்பட்டது. எழுத்தினங்கூறுவனென அதிகாரங்கூறப்பட்
டது. வழிபடுதெய்வ வணக்கஞ்செய்து மங்கலமொழிமுதல்
வகுத்தெடுத்துக்கொண்ட இலக்கண விலக்கிய மிடுக்கணின்றி
இனிதுமுடியுமென்பவாகலின் ஈண்டுவணக்கஞ்செய்யப்பட்டது.
இனி-எழுத்துமுதலாகிய எட்டினையுங் காரணக்குறியான்வழங்கு
மாறு. என்னை-எழுதப்படுதலினெழுத்தேயவ்வெழுத், தசைத்தி
சைகோடலினசையேயசையியைந்து, சீர்கொளநிற்றலிற்சீரே
சீரிரண்டு, தட்டுநிற்றலிற்றளையேயத்தளை, யடுத்துநடத்தலினடி
யேயடியிரண்டு,தொடுத்துமுதலாயினதொடையேயத்தொடை,
பாவினடத்தலிற்பாவேபாவொத்,தினமாய்நடத்தலினினமெனப்
படுமே. எனவரும். பந்தம் எனினும், தளை எனினும், ஒக்கும்.
என்னை - பகுத்தெதிர்நிற்றலிற்பந்தந்தளையென, வகுத்தனர்மா
தோவண்டீங்ஙேனோ. என்றாராகலின் - பல்லவத்தின்சந்தமடிய
வடியான் மருட்டிய தாழ்குழலே, எ - து. மகடூஉ - முன்னிலை.
ஏகாரம்-ஈற்றசை. சிறப்புப்பாயிரமுற்றிற்று. (௧)

அவையடக்கம்.

தேனார்கமழ்தொங்கன்மீனவன்கேட்பத்தெண்ணீரருவிக் *
கானார்மலையத்தருந்தவன்சொன்னகன்னித்தமிழ்நூல் *
யானுநடாத்துகின்றேனென்றெனக்கேநகைதருமா *
லானாவறிவினவர்கட்கென்னாங்கொலென்னாதரவே. (௨)

(இ-ள்.) இக்காரிகை நூலினதுபெருந்தன்மையும், ஆசிரிய
னதுபெருந்தன்மையும், தனதுள்ளக்குறைபாடுமுணர்த்தியமுக
த்தான் அவையடக்கமுணர்த்துதனுதலிற்று. (௨)

சுருக்கமில்கேள்வித்துகடீர்புலவர்முன்யான்மொழிந்த *
பருப்பொருடானும்விழுப்பொருளாம்பனிமாலிமயப் *
பொருப்பகஞ்சேர்ந்த பொல்லாக்கருங்காக்கையும் பொன்னிற
மா, யிருக்குமென்றிவ்வாறுனாக்குமன்றேருவிவ்விருநிலமே. (௩)

(இ-ள்.) இக்காரிகைபுலவரதுசிறப்புணர்த்தியமுகத்தானவை
யடக்கமுணர்த்துதனுதலிற்று. (௩)

குறினெடிலாவிகுறுகியமூவுயிராய்தமெய்யே ...... *
மறுவறுமூவினமைதீருயிர்மெய்மதிமருட்டுஞ் ...... *
சிறுநுதற்பேரமர்க்கட்செய்யவாய்ப்பையநுண்ணிடையா ...... *
யறிகுறியாய்தவளபுமசைக்குறுப்பாவனவே .... (௪)

(இ-ள்.) இக்காரிகைமேலதிகாரம்பாரித்தவெட்டினுள்ளுமசை
க்குறுப்பாமெழுத்துக்களது பெயர்வேறுபாடுணர்த்துதனுதலி
ற்று. குறிலாவன - அ இ உ எ ஒ - எனவிவை. என்னை - அ இ

உ எ ஒ - என்னுமைப்பாலைந்துமோரளபிசைக்குங் குற்றெழுத்தெ
ன்ப. நெடிலாவன - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ - எனவிவை -
என்னை - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ வெனுமப்பாலேழு மீரள
பிசைக்கும். நெட்டெழுத்தென்ப - என்றாராகலின் - ஆவியாவன
அகரமுதல் ஔகாரமீறாய்க்கிடந்த பன்னிரண்டெழுத்துமெனக்
கொள்க. ஆவியெனினுமுயிரெனினுமொக்கும். என்னை - அகர
முதல ஔகாரவிறுவாய்ப், பன்னீரெழுத்துமுயிரென மொழிப.
எ-ம். அகரமுதலஔகாரவிறுவா, யிசையொடுபுணர்ந்தவீராறு
முயிரே. என்றாராகலின் - குறுகியவுயிராவன - குற்றியலிகர
முங்குற்றியலுகரமும்; ஐகாரக்குறுக்கமும். எனவிவை - இவை
மேலேசொல்லுதும், ஆய்தமென்பதஃகேனம் - அஃகேனமெனி
னுமாய்தமெனினுந், தனிநிலையெனினும்புள்ளியெனினு, மொற்
றெனினுமொக்கும். என்னை - அஃகேனமாய்தந்தனிநிலைபுள்ளி,
யொற்றிப்பால வைந்துமிதற்கே. என்றாராகலின். (வரலாறு.)
கஃகு - கஃசு - கஃடு கஃது கஃபு - கஃறு. எனவரும். என்னை - குறி
யதன்முன்னராய்தப்புள்ளி, யுயிரொடுபுணர்ந்தவல்லாறன்மிசைத்
தே. என்றாராகலின் இனி மெய்யாவன - ககரமுதனகர மீறாய்க்
கிடந்த பதினெட்டெழுத்துமெனக்கொள்க. என்னை - ககரமுத
னகரவிறுவாய்ப், பதினெண்ணெழுத்து மெய்யென மொழிப.
எ-ம். ககரமுதனகரமீறாய், மும்மையின்வந்தவைவாறுமுடம்பே.
என்றாராகலின் - மெய்யெனினுமுடம்பெனினு முறுப்பெனினு
மொற்றெனினும்புள்ளியெனினுமொக்கும். என்னை, மெய்யுடம்
புறுப்பொற்றிவைதாமொருபொருட், செய்யுமென்றுசெப்பின
ர்புலவர். மெய்யினியற்கைபுள்ளியொடுநிலையல் - எகரஒகரத்தியற்
கையுமற்றே - மெய்யினியக்க மகரமொடுசிவணு - மெய்யுருநீங்
கிற்றன்னுருவாகும் - இவற்றின்மேனின்ற வகரமுச்சரித்தற்பொ
ருட்டெனக்கொள்க. என்றாராகலின் ஏகாரம் எண்ணேகாரம்.
என்னை - எண்ணேகாரமிடையிட்டுக்கொளினு - மெண்ணுக்குறித்
தியலுமென்மனார்புலவர். என்றாராகலின் - மறுவறுமூவினமாவன
வல்லினம் - மெல்லினம் - இடையினம் - எனவிவை - வல்லினமாவன -
கசடதபற - மெல்லினமாவன - ஙஞணநமன - இடையினமாவன
யரலவழள. என்னை - வல்லெழுத்தென்ப க ச ட த ப ற - மெல்லெ
ழுத்தென்ப ஙஞண நமன - இடையெழுத்தென்ப ய ர ல வ ழ ள
என்றாராகலின் மறுவறுமூவினமென்றுசிறப்பித்தவதனால் அவை
யுயிர்மெய்யாகிய காலத்துமப்பெயரானே வழங்கப்படுமெனக்
கொள்க. என்னை - விதப்புக்கிளவிவேண்டியதுவிளக்கும் என்று
ராகலின் - உயிர்மெய்யாவன - உயிருமெய்யுங்கூட்டியுச்சரிக்கப்ப
டாநின்ற பன்னிருபதினெட்டிருநூற்றிருபத்தாறெழுத்துமெ

ணக்கொள்க. அவையாவன - ககரமுதனகர மீறாய்க்கிடந்தபன்
னிருபதினெட் டிருநூற்றொருபத் தாறெழுத்துமெனக்கொள்க.
என்னை- உயிரீராறேமெய்ம்மூவாறே, யம்மூவாறுமுயிரோடுயிர்
ப்ப, விருநூற்றொருபத்தாறுயிர்மெய்யே. எ - ம். புள்ளியில்லா
வெல்லாமெய்யு, முருவுருவாகியகரமொடுயிர்த்தலும், மேனையுயி
ரோடுருபுதிரிந்துயிர்த்தலு; மாயீரியலவுயிர்த்தலாறே. எ - ம்.
மெய்யின்வழியதுயிர்தோன்றுநிலையே. என்றாராகலின், மைதீ
ருயிர்மெய்யென்று சிறப்பித்தவதனால் ஏறியவுயிரினளவே யுயிர்
மெய்க்குமளவெனக்கொள்க என்னை- உயிர்மெய்க்களவுமுயிரள
வென்ப. என்றாராகலின் - மதிமருட்டுஞ்சிறுநுதற் பேரமர்க்கட்
செய்யவாயைய நுண்ணிடையாயென்பது மகடூஉமுன்னிலை. என்
னை - இடம்படமெய்ஞ்ஞானங் கற்பினுமென்று, மடங்காதாரெ
ன்றுமடங்கார்-தடங்கண்ணாய், யுப்பொடுநெய்பா றயிர்காயம் பெ
ய்தடினுங், கைப்பறாப்பேய்ச்சுரையின்காய். எனப்பிறருந்தடங்
கண்ணாயென்று மகடூஉமுன்னிலைசொன்னாருமுளரெனக்கொள்க
மதியென்பதீண்டுப்பிறை. அஃதிருகோட்டொருமதியெழில்பெ
றயிலைச்சினையென்றாற்போலக்கொள்க. அல்லதூஉம்-அறிவினைமய
க்குஞ் சிறுநுதன்முதலாகிய வுறுப்புக்களை யுடையாயென்றுமா
ம். அறிஞருரைத்த அளபுமென்பது புலவராற் சொல்லப்பட்ட
அளபெடைகளும். எ-று. அளபெனினு மளபெடையெனினும்
புலுதமெனினுமொக்கும். என்னை - அளபேபுலுதமாயிருபெய
ரு, மளபெடையென்பரறிந்திசினோரே. உயிரளபேழுமுரைத்த
முறையான், வருமெனினவ்வயின்வைக்கப்படுமே. என்றாராகலி
ன்-அவைபோக்கிச்சொல்லுதும் - அசைக்குறுப்பாவன வென்
பது - இப்பதின்மூன்றுதிறத்தெழுத்து மசைக்குறுப்பாமெழுத்
து. எ-று. ஏகாரமீற்றசை. ஏகாரம் தேற்றேகாரமெனினுமமை
யும். என்னை- தேற்றம்வினாவேபிரிநிலையெண்ணே, யீற்றசையிவ்
வைந்தேகாரம்மே. என்றாராகலின் - என்னை - குறினெடிலளபெ
டையுயிருறுப்புயிர்மெய், வலியன்மெலிய விடைமையோடாய்,
தம் இ உ ஐ யெனமூன்றுகுறுக்கமோ, டப்பதின்மூன்றுமசை
க்குறுப்பாகும். என்றார் காக்கைபாடினியாரு மெனக்கொள்க.
இனி மூவுயிர்க்குறுக்கமு மளபெடைகளுமாமாறு சொல்லுதும
வற்றுட் குற்றியலுகரம்வருமாறு. நெடிற்கீழும் நெடிலொற்றி
ன்கீழுங் குறிலிணைக்கீழுங் குறிலிணையொற்றின்கீழுங் குறினெடி
ற்கீழுங் குறினெடிலொற்றின்கீழுங் குற்றொற்றின்கீழுமென் றிவ்
வேழிடத்தாறு வல்லெழுத்தினையுமூர்ந் துகரம் வந்தால் அது
குற்றியலுகரமென்று வழங்கப்படுமெனக்கொள்க. என்னை- நெ

டிலேகுறிலிணைகுறினெடிலென்றிவை, யொற்றொடுவருதலொடு
குற்றொற்றிறுதியென், றேழ்குற்றுகரக்கிடமெனமொழிப. எழு
வகையிடத்துங் குற்றியலுகரம், வழுவின்றிவரூஉம் வல்லாறூர்ந்
தே. என்றாராகலின் - அவைவருமாறு - நாகு-காசு-காடு-காது-
காபு-காறு என நெடிற்கீழாறுவல்லெழுத்தினையுமூர்ந்து குற்றிய
லுகரம் வந்தவாறு. நாக்கு-காச்சு காட்டு-காத்து-காப்பு-காற்று-
என நெடிலொற்றின்கீழாறு வல்லெழுத்தினையுமூர்ந்து குற்றிய
லுகரம்வந்தவாறு. வரகு - முரசு - முருடு - மருது - துரபு-கவ
று-எனக் குறிலிணைக்கீழாறுவல்லெழுத்தினையமூர்ந்து குற்றியலு
கரம்வந்தவாறு - அரக்கு - பொரிச்சு - திருட்டு - குருத்து-
பொருப்பு - சிரற்று - எனக் குறிலிணையொற்றின்கீழாறுவல்லெ
ழுத்தினையுமூர்ந்து குற்றியலுகரம்வந்தவாறு. அசோகு-பலாசு-
மலாடு - கொடாது - புதாபு - விராறு - எனக் குறினெடிற்கீழா
றுவல்லெழுத்தினையுமூர்ந்து குற்றியலுகரம்வந்தவாறு. தமாக்கு-
தடாச்சு-பளுட்டு - கொடாற்று-புதாப்பு- விராற்று - எனக் குறி
னெடிலொற்றின்கீழாறுவல்லெழுத்தினையுமூர்ந்து குற்றியலுகர
ம்வந்தவாறு. நக்கு-கச்சு கட்டு கத்து-கப்பு-கற்று எனக்குற்றொ
ற்றின்கீழாறுவல்லெழுத்தினையமூர்ந்து குற்றியலுகரம்வந்தவா
றுகாண்க. இனிக்குற்றியலுகரவெழுத்தாறுவகைப்படுமென்பா
ருமுளர். அவையாவன-நெட்டெழுத்தொருமொழி - உயிர்த்தொடர்
மொழி - இடைத்தொடர்மொழி - ஆய்தத்தொடர்மொழி - வன்
றொடர்மொழி - மென்றொடர்மொழி - என்றிவை. என்னை-
நெட்டெழுத்தொருமொழியுயிர்த்தொடரிடைத்தொட, ராய்தத்தொ
டர்மொழிவன்றொடர்மென்றொட, ராயிருமூன்றேயுகரங்குறுகி
டன். என்றாராகலின் - இனிக்குற்றியலிகரம்வருமாறு - உகரந்
திரிந்துந்திரியாதும் யகரமொழியைப்பின்கண் வந்தவிகரங் குற்றி
யலிகரமென்றுவழங்கப்படும். என்னை - வல்லெழுத்தாறொடெழு
வகையிடத்து, முகரமனையாம்யகரமொழியைப், இகரமுங்குறு
குமென்மனார்புலவர். என்னை - யகரம்வரும்வழியிகரமுங்குறுகு,
முகரக்கிளவிதுவரத்தோன்றாது, புள்ளியிற்றின் முன்றுயிர்தனி
த்தியலாது, மெய்யொடுசிவணுமவ்வியல்கெடுத்தே. எனவுஞ்சொ
ன்னாராகலின் (வருமாறு.) நாகியாது - காசியாது - காடியாது-
காதியாது - காபியாது - காறியாது - எனவரும். ஒழிந்தனவுமி
வ்வாறேயொட்டிக்கொள்க. இனித் திரியாது வந்த குற்றியலிகரம்
வருமாறு-கேண்மியா - சென்மியாவெனக்கொள்க. குற்றியலிக
ரம் நிற்றல்வேண்டு - மியாவென்சினைமிசையுரையசைக்கிளவிக்,
காவயின்வரூஉ மிகரமூர்ந்தே. என்றாராகலின் - இனி ஐகாரக்
குறுக்கத்திற்குச்சொல்லுமாறு. அளபெடுத்தற்கண்ணுந் தனியே

சொல்லுதற்கண்ணு மின்றியல்லாத வழிவந்தவைகாரந் தன்னள
விற்சுருங்கி யொவ்வறைமாத்திரையு மொருமாத்திரையு மாகக்
குறுகுமெனக்கொள்க. அவை குறுகுமிடத்துமொழிமுதலிடை
கடையெனமூன்றிடத்துங்குறுகும். என்னை - அளபெடைதனி
யிரண்டல்வழி ஐ ஔ, வுளதாமொன்றரை தனிமையுமாகும்.
என்றாராகலின், (வரலாறு.) ஐப்பசி - மைப்புறம் - மடையன்.
உடைவாள்-குவளை-தவளை - திணை - பனை - என முதலும்-இடை-
யும்-கடையுங் குறுகியவாறுகண்டுகொள்க. என்னை - மொழிமுத
லிடைகடை யெனமூன்றிடத்து, மழியாதைகா ரங்குறுகுமே.
என்றாராகலின் - இனி யளபெடைக்குச்சொல்லுமாறு. அளபெ
டையிரண்டுவகைப்படும். உயிரளபெடையும் ஒற்றளபெடையு
மென. என்னை - உயிரளபெடையு மொற்றளபெடையுமென்,
றாயிரண்டென்பவளபெடைதாமே. என்றாராகலின் - அவற்றுள்-
உயிருள்நெட்டெழுத்தேழுமளபெடுக்கும். அவை யளபெடுக்கு
மிடத்து ஐகாரமிகரத்தோடளபெடுக்கும், ஔகாரமுகரத்தோ
டளபெடுக்கும், ஒழிந்தனவுந் தமக்கினமாகிய குற்றெழுத்தோ
டளபெடுக்குமெனக்கொள்க. என்னை-குன்றிசைமொழிவயினின்
றிசைநிறைக்கு, நெட்டெழுத்தின்பின பொத்தகுற்றெழுத்தே,
ஐ ஔ வென்னுமாயீரெழுத்திற், கிகரவுகர மிசைநிறைவாகும்.
என்றார் தொல்காப்பியனார். (வரலாறு.) ஆ-ஈ-ஊ-ஏ-ஐ ஓ-ஔ-
எனக்கொள்க. அவைநான்கிடத்தும்வந்தளபெடுக்கும். என்னை-
தனிநிலைமுதனிலையிடைநிலையீறென, நால்வகைப்படூஉமளபாய்
வருமிடனே. என்றாராகலின்- (வரலாறு.) ஆஅ - ஈஇ - ஊஉ-
ஏஎ - ஐஇ - ஓஒ - ஔஉ- என இவையேழுந்தனிநிலையளபெடை.
ஆஅரிட்ம் - ஈஇரிலை - ஊஉரிடம் - ஏஎரிகள் - ஐஇயபி-ஓஒரிகள்-
ஔஉவியம்-என இவையேழுமுதனிலையளபெடை. படாஅகை-
பரீஇயம் - கழூஉமணி - பரோஎரம் - வளைஇயம் - புரோஒசை-
அநௌஉகம் - என இவையேழுமிடைநிலையளபெடை. கடாஅ-
குரீஇ - கழூஉ - மிலேஎ - கடைஇ - அரோஒ - அநௌஉ - என
இவ்வேழுமிறுதிநிலையளபெடை. உயிரளபெடை- எழுத்துநோ
க்கவேழாகு-மிடநோக்கநான்காகு- மெழுத்துமிடமுமுறழ்ந்து
நோக்க விருபத்தெட்டாமெனக்கொள்க. அவையேழும் நான்
கிடத்து மிருபத்தெட்டும்வந்தவாறுகண்டுகொள்க. இனி யொற்
றளபெடைக்குச் சொல்லுமாறு. ஒற்றுக்களுள் - ஙஞணநமன
வயலளவாய்தமென்னும் பதினோரொற்றுங்குறிற்கீழுங்குறிலிணை
க்கீழும் வந்தளபெடுக்குமெனக்கொள்க. என்னை-ஙஞணநமன
வயலளவாய்த, மெனுமிவையீரிடத் தளபெழூஉ மொரோவழி,
வன்மையொடுரஃகான்ழஃகானொழிந்தாங்- கன்மையாய்தமெ

டளபெடுமொரோவழி. என்றாராகலின்.(வரலாறு.) மங்ங்கலம்-மஞ்ஞ்சு - மண்ண்ணு - பந்ந்து - அம்ம்பு - மின்ன்னு - தெவ்வ்வர் - வெய்ய்யா - செல்ல்க - கொள்ள்க - எஃஃகு - எனக் குறிற்கீழ்ப்பதினொற்றும் அளபெழுந்தவாறு கண்டுகொள்க. அரங்ங்கம் - முரஞ்ஞ்சு - முரண்ண்டு - பருந்ந்து - அரும்ம்பு - முரன்ன்று - குரவ்வ்வை - அணைய்ய்ர் - குரல்ல்கள் - திரள்ள்கள் - வரஃஃது- எனக்குறிலிணைக்கீழ்ப்பதினொற்றும் அளபெழுந்தவாறு கண்டுகொள்க. இவ்விருபத்திரண்டு புள்ளியளபெடையுஞ் செய்யுளகத்தல்லது பரவைவழக்கினுள்வாராவெனக்கொள்க. என்னை. மாத்திரைவகைபாற்றனைதபுகெடாநிலை, யாப்பழியாமையென்றளபெடைவேண்டும். என்றாராகலின் - அநிஞருணாத்த வளபுமென்று சிறப்பித்தவதனாற் குற்றெழுத்தொருமாத்திரை-நெட்டெழுத்திரண்டுமாத்திரை-அளபெடைமூன்றுமாத்திரை-ஆய்தமும்மெய்யுங் குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் அரை ஒன்றரைமாத்திரை ஐகாரக்குறுக்கமும்-ஔகாரக்குறுக்கமும்- ஒற்றளபெடையும்-ஒருமாத்திரை - மகரக்குறுக்கமும்-ஆய்தக்குறுக்கமும்-கால்மாத்திரை. என்னை-ஒன்றிரண்டொருமூன்றொன்றரையரைகா, லென்றனர்பொழுதினை யிமைநொடியளவே. கண்ணிமைகைந்நொடியளவேமாத்திரை, நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறே. ஒற்றுக்குமாத்திரையொன்றளபெழுந்தாற், றெற்றக்குறியிலிதுவேயாகும். உன்னல்காலேயூன்றலரையே, முறுக்கன்முக்கால்விடுத்தலொன்றே. என்றார் பிறருமெனக்கொள்க. (சூ)

குறிலேநெடிலேகுறிலிணையேனைக்குறினெடிலே .... *
நெறியேவரினுநிரைந்தொற்றடுப்பினுநேர்நிரையென் .... *
றறிவேய்புரையுமென்றோளியுதாரணமாழிவெள்வேல்..... ... *
வெறியேசுறாநிறம்விண்டோய்விளாமென்றுவேண்டுவரோ.....(ரு)

(இ-ள்.) இக்காரிகை நிரைநிரைப்பொருள்கோள்வகையானே ரசையு நிரையசையுமாமாறு மவற்றிற்குதாரணமாமாறும் உணர்த்துதனுதலிற்று. குறிலேநெடிலேகுறிலிணையேனைக் குறினெடிலே, நெறியேவரினு நிரைந்தொற்றடுப்பினுநேர்நிரையென்றறி - என்பது, குற்றெழுத்துத்தனியேவரினும் நெட்டெழுத்துத்தனியேவரினும் குற்றெழுத்தொற்றடுத்துவரினு நெட்டெழுத்தொற்றடுத்துவரினும் நேரசையாம். குறிலிணைந்துவரினுங் குறினெடிலிணைந்துவரினும் - குறிலிணைந்தொற்றடுத்துவரினும். குறினெடிலிணைந்தொற்றடுத்துவரினும்-நிரையசையாம். என்னை நெடில்குறிறனியாய் நின்றுமொற்றடுத்தும், நடைபெறுநேரசைநால்வகையானே, குறிலிணைகுறினெடி றனித்துமொற் றடுத்தும், நெறிமையினான்காய்வருநிரையசையே. என்றாராகலின்-

வேய்புரையுமென்றோளியென்பது மகடூஉ முன்னிலை- நேரசை
க்குதாரணம்- ஆ - ழி - வெள்வேலெனவும் நிரையசைக்குதாரணம்.
வெறி - சுறு - நிறம் - விளாம் - எனவுஞ்சொல்லுவர் புலவரென்
றவாறு. அகலமுரையிற்கொள்க. அகலமெனினும் விருத்தியு
ரையெனினுமொக்கும் என்னை அகலமென்பது தாசறக்கிளப்பின்
விகலமின்றி விரித்துரைப்பதுவே. என்றாராகலின் விண்டோய்
விளாமென்று சிறப்பித்தவதனால் நேரசையோரலகுபெறும்
நிரையசை ஈரலகுபெறுமெனக்கொள்க. வரலாறு - ஆ - எனத்
தனிநெடில் நேரசையாயினவாறு. ழி எனத்தனிக்குறில் நேர
சையாயினவாறு. வெள் - எனக்குற்றெழுத்தொற்றடுத்துவந்து
நேரசையாயினவாறு வேல் - எனநெட்டெழுத்தொற்றடுத்துவ
ந்து நேரசையாயினவாறு. வெறி - எனக்குறிலிரண்டிணைந்துவ
ந்து நிரையசையாயினவாறு- சுறு- வெனக்குறினெடிலிணைந்து
வந்து நிரையசையாயினவாறு. நிறம் - எனக்குறிலிணைந்தொற்
றடுத்துவந்து நிரையசையாயினவாறு. விளாம் - எனக்குறினெ
டிலிணைந்தொற் றடுத்துவந்து. நிரையசையாயின வாறுகாண்க.
இவற்றிற்குச்செய்யுள் வருமாறு. போதுசாந்தம் பொற்பவே
ந்தியாதி நாதற்சேர்வோர் சோதிவானந் துன்னுவோரே. இது
நேரசைநான்கிற்கும்வந்தசெய்யுள்- அணிநிழல சோகமர்ந்தரு
ணெறிநடாத்திய மணிதிகழவிரொளி வரதனைப்பணிபவர் பவ
நனிபரிசறுப்பவர்களே. இது நிரையசை நான்கிற்கும்வந்தசெ
ய்யுள். குறிலேநெடிலே யென்னுமிக்காரிகைதன்னையேயிலக்கி
யமாக வலகிடினுமிழுக்காது என்னை குறிலேநெடிலேகுறிலிணை
குறினெடி லொற்றொடுவருதலொடு மெய்ப்படநாடிநேருநிரை
யுமென்றிசினோரே - என்றார் தொல்காப்பியனார். கோழி வே
ந்தன் நேரசை நிரையசை யாழ்புனல் வாழ்க்கை வெறி சுறு நிற
ங் குராலென் றுதாரணமெடுத்தோதினாருமுளரெனக்கொள்க.

ஈரசைநாற்சீரகவற்குரிய வெண்பாவினவாம். - - - - *
நேரசையாலிற்றமூவசைச்சீர்நிரையாலிறுப - - - - *
வாரசைமென்முலை மாதேவகுத்தவஞ்சிக்குரிச்சீர் - - - *
ஓரசையேநின்றுஞ்சீராம் பொதுவொருநாலசையே. - - *

என்பது. இக்காரிகை அவ்வசைகளானாகிய சீர்களது பெயர்
வேறு பாடுணர்த்துத னுதலிற்று- ஈரசைநாற்சீரகவற்குரியவெ
ண்பது இரண்டசையினானாகி யநான்குசீரு மாசிரியவுரிச்சீரென
ப்படுமென்றவாறு. அகவலெனினு மாசிரியமெனினுமொக்கும்.
என்னை. அகவலென்ப தாசிரியப்பெயரே. என்றாராகலின் வெண்

பாவினவாம் நேரசையாலிற்ற மூவசைச்சீரொன்றது. நேரசை
யிறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வெண்பாவுரிச்சீரெனப்ப
டுமென்றவாறு. நிரையாலிறுபவஞ்சிக்குரிச்சீரொன்றது. நிரைய
சையிறுதியாகிய மூவசைச்சீர்நான்கும் வஞ்சியுரிச்சீரெனப்படு
மென்றவாறு. வாரசைமென்முலை மாதே யென்றது மகடூஉ
முன்னிலை. ஓரசையே நின்றுஞ் சீராமென்பது- ஒரோவிடத்து
நேரசைதானே நின்றுஞ்சீராம். நிரையசைதானே நின்றுஞ்சீரா
மவை யசைச்சீரெனப்படு மென்றவாறு. பொதுவொருநா
லசையே யென்பது நாலசையினானாகிய சீர்பொதுச்சீர் எனப்
படுமென்றவாறு. நான்குமென்பதனையெல்லா வற்றோடுங்கூட்
டி மத்திமதீபமாகப் பொருளுரைத்துக்கொள்க. என்னை- ஈர
சைகூடிய சீரியற்சீரவை- யீரிரண்டென்ப ரியல்புணர்ந்தோரே
மூவசைச்சீருரிச் சீருநான்கினு னேரிறுநான்கும் வெள்ளையல்
லன பாவினுள் வஞ்சியின்பாற்பட்டனவே நாலசையானு நடை
பெறுமோரசைச் சீர்நிலையெய்தலுஞ் சிலவிடத்துளவேயென்றார்
காக்கைபாடினியார். .... -(சூ)

தேமாபுளிமாகருவிளங்கூவிளஞ்சீரகவற் ! .... *
காமாங்கடைகாயடையின்வெண்பாவிற்கந்தங்கனியாய் ...... *
வாமாண்கலைபல்குன்மாதேவருபவஞ்சிக்குரிச்சீர் ...... *
நாமாண்புரைத்தவசைச்சீர்க்குதாரண நாண்மலரே ...... *

என்பது. இக்காரிகைமுறையானே முதனான்குசீருக்கு முதா
ரணமாமாறுணர்த்துதனுதலிற்று. தேமாபுளிமாகருவிளங்கூவி
ளஞ்சீர்கவற்கா மென்பது-நேர்-நேர்-நிரைநேர்-நிரைநிரை-நேர்
நிரையாகிய தேமா புளிமா கருவிளம் கூவிளம் என்று நான்கு
சீருமாசிரிய வுரிச்சீருக்குதாரணமா மென்றவாறு. ஆங்கடை
காயடையின் வெண்பாவிற்கென்பது - அவற்றுள்கடைகாயென்
னுஞ் சொற்பெற்று - தேமாங்காய் - புளிமாங்காய் - கருவிளங்
காய் - கூவிளங்காய் - எனவருநான்குசீரும் வெண்பாவுரிச்சீருக்
குதாரணமாமென்றவாறு. அந்தங்கனியாய் வாமாண்கலைபல்கு
ன்மாதேவருபவஞ்சிக்குரிச்சீர் எ-து. அவ்விரசைச்சீரிறுதிக்கட்க
னியென்னுஞ் சொற்பெற்றுத் தேமாங்கனி - புளிமாங்கனி-
கருவிளங்கனி - கூவிளங்கனி - எனவரும் நான்குசீரும் வஞ்சியு
ரிச்சீருக் குதாரணமாமென்றவாறு. வாமாண்கலையல்குன்மாதே
என்பது - மகடூஉமுன்னிலை. நாமாண்புரைத்த வசைச்சீர்க்குதார
ண நாண்மலரே. என்பது. ஒரோவிடத்தா மென்றுரைக்கப்பட்ட
ஓரசைச்சீருக்குதாரணம். நாள் என்பதூஉம் - மலரென்பதூ
உம் - ஆமென்றவாறு. நாள் என்பது நேரசைச்சீருக் குதார

ணம். மலர் என்பது நிரையசைச்சீருக் குதாரணம். ஆமென்பதனை எல்லாவற்றொடுங்கூட்டி மத்திமதீபமாகப் பொருளுரைத்துக் கொள்க. அம்பவளவரிநெடுங்கணுமஞ்சிக்கொம்ம பவளக்கொடி மருங்குல்கொங்கினரும்பவள் முலையொக்குமே யொக்குங்கரும்பவள்வாயிற்சொல் - என்னும் - இப்பொய்கையார் வாக்கினுள் ஒக்குமென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டிப் பொருளுரைத்துக்கொண்டாற்போலக்கொள்க. .... (எ)

தண்ணிழறண்பூநறும்பூநறுநிழறந்துறழ்ந்தா .... *
லெண்ணிரு நாலசைச்சீர்வந் தருகுமினியவற்றுட் .... *
கண்ணியபூவினங்காய்ச்சீரனைய கனியொடொக்கு .... *
மொண்ணிழற்சீரசைச்சீரியற்சீரொக்குமொண்டளக்கே .... *

என்பது. இக்காரிகை பொதுச்சீருக் குதாரணமா மாறும்வற்றதென்னும் பொதுச்சீரு மசைச்சீரும்வந்து தளைவழங்குமா மாறு முணர்த்துதனுதலிற்று. தண்ணிழறண்பூநறும்பூநறுநிழற்றுறழ்ந்தா லெண்ணிரு நாலசைச்சீர்வந் தருகுமென்பது தேமா-புளிமா-கருவிளம்-கூவிளம்-என்னும் நான்கினோடும் தண்ணிழல் தண்பூநறும் பூ-நறுநிழலென்னும் நான்கினையு முறையானே கூட்டி யுறழ்ந்தாற் பதினாறுநாலசைச்சீருக் குதாரணமாமென்றவாறு. தேமா-புளிமா-கருவிளம்-கூவிளம்-என்பன அதிகாரத்தால்வருவித்துரைக்கப்பட்டன. அருகும் - என்பதனால் அச்சீர் செய்யுளகத் தருகியன்றி வாராவெனக்கொள்க. அவைவருமாறு. தேமாந்தண்ணிழல்-புளிமாந்தண்ணிழல்-கருவிளந்தண்ணிழல்- கூவிளந்தண்ணிழல்(எனவும்) தேமாந்தண்பூ-புளிமாந்தண்பூ-கருவிளந்தண்பூ-கூவிளந்தண்பூ-(எனவும்)தேமாநறும்பூ-புளிமாநறும்பூ கருவிளநறும்பூ-கூவிளநறும்பூ - (எனவும்) தேமாநறுநிழல்-புளிமாநறுநிழல்-கருவிளநறுநிழல்-கூவிளநறுநிழல் - எனவுங்கொள்க. இனியவற்றுட்கண்ணியபூவினங்காய்ச்சீரனையவென்பது. அந்நாலசைச்சீர் பதினாறனுள்ளும் பூவென்னுஞ் சொல்லிறுதியாகிய நேரீற்றுப்பொதுச்சீரெட்டுங் காயென்னுஞ் சொல்லிறுதியாகிய வெண்பாவுரிச்சீரேபோலக்கொண்டு வருஞ்சீர் முதலசையோடொன்றுவது வெண்சீர்வெண்டளையாகவு மொன்றாதது கலித்தளையாகவுங்கொண்டு வழங்கப் படுமென்றவாறு. கனியொடொக்குமொண்ணிழற் சீரென்பது நிழலென்னுஞ்சொல்லிறுதியாகிய நிரையீற்றுப்பொதுச்சீரெட்டுங் கனியென்னுஞ் சொல்லிறுதியாகிய வஞ்சியுரிச்சீரேபோல் வருஞ்சீர் முதலசையொடொன்றினு மொன்றாவிடினும் வஞ்சித்தளையாகக்கொண்டு வழங்கப்படுமென்றவாறு. அசைச்சீரியற் சீரொக்குமென்பது அசைச்சீரா

முதலாவது றுப்பியல்-

யாசிரியவுரிச்சீரோபோற்கொண்டுவருஞ்சீர் முதலசையோடொன்றுவது ஆசிரியத்தளையாகவும் ஒன்றாதது இயற்சீர்வெண்டளையாகவுங்கொண்டு வழங்கப்படுமென்றவாறு. இயற்சீரெனினுமாசிரியவுரிச்சீரெனினுமொக்கும் என்னை- இயற்சீரெல்லா மாசிரியவுரிச்சீரென்றாகலின் ஒண்டளைக்கென்பது ஒள்ளியதளைவழங்குமிடத்தென்றவாறு ஒண்டளைக்கென்பது - இறுதிவிளக்கெனக்கொள்க. கன்னணியபூவினமென்று சிறப்பித்தவதனால் வெண்பாவினுள் நாலசைச்சீர்வாரா ஆசிரியத்துள்ளுங் குற்றுகரம்வந்துழியன்றிவாரா கலியினுள்ளும்பெரும்பான்மையுங் குற்றுகரம்வந்துழியன்றிவாரா வஞ்சியுட்குற்றுகரம்வாராதேயும் வரப்பெறும் வஞ்சியுளிரண்டு நாலசைச்சீரொடியுள்ளருகிக்கன்னுற்றுநிற்கவும்பெறும் அல்லனவற்றிற்குப்பெரும்பான்மையு மோரடியு மொன்றனறிவாரா இரண்டுவரினுங்கன்னுற்றுநில்லா பாவின்றளைப்பாவினத்துள்ளும்பயின்று வாராவெனக்கொள்க. ஒன்னணிழற்சீரொன்று சிறப்பித்ததனால் - நிழலென்னுஞ்சொல்லிறுதியாகிய நிரையீற்றுப்பொதுச்சீரொட்டும் கனியென்னுஞ் சொல்லிறுதியாகிய வஞ்சியுளல்லது வாராவெனக்கொள்க. (எனை) நாலசையாய்நடை-பெற்றன வஞ்சியுளீரொன்றணைதலு மேனுழியொன்றுசென்றாகலுமந்த நிரையசைவந்தனகூறிய வஞ்சிக்குணத்தன வாதலுமாகுத வென்ப வறிந்திசினோ என்றார் காக்கைபாடினியார் இனி ஒருசாரார்வெண்பாவினுள்ள பெழுந்தால்நாலசைச்சீர்வ ருமென்பாருளராயினும்அவற்றனலகிட்டுதாரணவாய் பாட்டாலோசையூட்டும்பொழுது செப்பலோசை பிழைக்குமென்பதூஉம் ஆண்டிச்சீருந்தளை யுஞ்சிதையாமையா னளபெடுப்பனவு மல்லவளபெடுப்பினுமளபெடைகள் அலகுகாரியம்பெறுவனவல்லவென்பதூஉம் காக்கைபாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவுமதுவே இந்நூலுடையாருக்கு முடன்பாடு........................ *

குன்றக்குறவன்கவல்பொன்றரம்வெண்பாட்டுவஞ்சிக் *
கொன்றுமுதாரணம்பூந்தாமரையென்பவோரசைச்சீர் .. *
நன்றறிவாரிற்கயவரும்பாலொடு நாலசைச்சீர்க் ... . *
சன்றதென்றாரள்ளற்பள்ளத்திடங்கண்வானத்துமே.. *

என்பது - இக்காரிகை முறையானே ஐந்துவகைப்பட்டசீரானும் வந்தவிலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்துதனுதலிற்று. குன்றக்குறவ னகவலென்றது குன்றக்குறவன்காதன் மடமகள் வரையரமகளிர் புரையுஞ்சாயலளை யரும்பியமுலையள் செய்ய வாயினள் மார்பினள்சுணங்கே. இந்நேரிசை யாசிரியப்பாவினு

ள் ஆசிரியவுரிச்சீர்நான்கும் வந்தவாறுகண்டுகொள்க. பொன்னு ரம்வெண்பாட்டென்றது பொன்னுரமார்பிற்புனைகழற்காற்கிள் ளிபெயர். உன்னேனென்றாழுலக்கைபற்றினேற் கன்னேமன னெடுவாயெல்லா மல்குநீர்க்கோழிப்புனலூடன் பேரோவருட். இந்நேரிசைவெண்பாவினுள் வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்த வாறுகண்டுகொள்க. வஞ்சிக்கொன்று முதாரணம் பூந்தாமரை யென்பது பூந்தாமரைப்போதலமரத் தேளம்புனலிடைமீஇன் றிரிதரும் வளவயலிடைக்களவயின்மகிழ் வினைக்கம்பலைமனைச் சிலம்பவு மனைச்சிலம்பியமணமுரசொடு வயற்கம்பலைக்கயலார் ப்பவும் நாளுமகிழுமகிழ்தூஉங்கூரன் புகழ்தலானுப்பெருவண் மையனே இக்குறளடி வஞ்சிப்பாவினுள் வஞ்சியுரிச்சீர்நான் கும் வந்தவாறுகண்டுகொள்க. ஓரசைச்சீர் நன்றறிவாரிற்கயவரும் பாலொடென்பது நன்றறிவாரிற்கயவர்திருவுடையர் நெஞ்சத் தவலமிலா. எனவும் பாலொடுதேன்கலந்தற்றேபனிமொழி வா லெயிறூறியநீர். எனவும் இக்குறள்வெண்பாக்களுள் - இலர் - எ-ம்- நீர்- எ--ம் - அசைச்சீர்களாயினவாறு கண்டுகொள்க. நால சைச்சீர்க்கன்றதென்றூரள்ளற் பள்ளத்தினுடங்கண்வானத்தும் அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு வேங்கைவாயில் வியன்குன்றூ ரன். என்னும் பழம்பாட்டினுள் ஓரடியுளிரண்டு நாலசைச்சீர் வந்தவாறுகண்டுகொள்க. அங்கண்வானத்தமரரசரும் வெங்களி யானைவேல் வேந்தரும்வடிவார் கூந்தன்மங்கையரும் கடிமலரே ந்திக்கதழ்ந்திறைஞ்சிச் சிங்கஞ்சுமந்தமணியணையிசைக் கொங்க விரசோகின் குளிர்நிழற்கீழ்ச் செழுநீர்ப்பவளத் திரள்காம்பின் முழுமதி புரையுமுக்குடைநீழல்வெங்கண் வினைப்பகைவிளிவெ ய்தப் பொன் புனைநெடுமதில்புடைவளைப்ப வனந்தசதுட்டய ம்வையெய்த நனந்தலையுலகுடனவைநீங்க மந்தமாருதமருங்கசை ப்ப வந்தரதுந்துபிநின்றியம்ப விலங்குசாமரையெழுந்தலமர நலங்கிளர்பூமழை நனிசொரிதர வினிதிருந்தருணெறி நடாத்தி யவாதிதன் றிருவடி பரவுதுஞ்சித்திபெறற்பொருட்டே. இக்கு றளடிவஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர்பதினாறும் அடிதொறுமு தற்கண்ணே வந்தவாறுகண்டுகொள்க. இதனுள் நேரீற்றுப்பொ துச்சீர்நின்று தன்வருஞ்சீர்முதலசையோ டொன்றுவதுவெண் சீர்வெண்டளையாகவும் ஒன்றாதது கலித்தளையாகவுங்கொண்டு வழங்கப்படுமென்றவாறு. நிரையீற்றுப்பொதுச்சீர் நின்றுதன் வருஞ்சீர் முதலசையோடொன்றுவதும் ஒன்றாததுவும் வஞ்சி த்தளையாகக் கொண்டு வழங்கப்படுமென்றவாறு. இவ்வாறு பிறநும் குன்றுகூதிர் பண்பு தோழிபினியவைமுத்துறழெ

ன்றிவையெல்லாந் தெளியவந்தசெந்துறைச்செந்துறை என்
றுதாரண மெடுத்தோதினுமெனக்கொள்க..... ....(௯)

தன்சீர் தனதொன் றிற்றன் றளையாந்தணவாதவஞ்சி..... .. *
வண்சீர்விகற்பமும் வஞ்சிக்குரித்துவல்லோர்வகுத்த .... *
வெண்சீர்விகற்பங் கலித்தளையாய்விடும் வெண்டளையா *
மொண்சீரகவ லுரிச்சீர்விகற்பமு மொண்ணுதலே......*

என்பது. இக்காரிகைநின்றசீரினீற்றசையும் வருஞ்சீரின்முத
லசையுந்தம்மு ளொன்றுவது மொன்றாததுமாகிய வேற்றளையு
மாமாறுணர்த்துதனுதலிற்று தன்சீர்தனதொன்றிற் றன்றளையா
மென்பதுதன்சீர்நின்று தன்வருஞ்சீர்முதலசையே டொன்றுவ
துதன் றளையாமென்றவாறு. எனவே ஆசிரியவுரிச்சீர் நின்று தன்வ
ருஞ்சீர்முதலசையோடு நேராயொன்றுவது நேரொன்றாசிரிய
த்தளை நிரையாயொன்றுவது நிரையொன்றாசிரியத்தளையாமெ
ன்றவாறு. வஞ்சியுரிச்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோ
டொன்றுவது ஒன்றியவஞ்சித்தளையா மென்றவாறு. தணவ
தவென்று மிகுத்துச்சொல்லியவதனால் தன்சீர்நின்று பிறிதாகி
வருஞ்சீர் முதலசையோடொன்றுவது தன்றளையேசிறப்பின்றா
யினுமெனக்கொள்க- வஞ்சிவண்சீர்விகற்பமும் வஞ்சிக்குரித்து
என்பது வஞ்சியுரிச்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோ
டொன்றாததூஉம் வஞ்சித்தளையேசிறப்பின்றாயினுமெனக்கொ
ள்க. வல்லோர்வகுத்தவென்று சிறப்பித்தவதனால் வெண்பாவுரி
ச்சீர்நின்றுபிறிதாகிவருஞ் சீர்முதலசையோ டொன்றாததூஉம்
கலித்தளையே சிறப்பின்றாயினுமெனக்கொள்க. வெண்டளையா
மொண்சீரகவலுரிச்சீர் விகற்பமுமொண்ணுதலென்பது ஆசிரி
யவுரிச்சீர்நின்று தன்வருஞ்சீர்முதலசையோ டொன்றாததூஉமி
யற்சீர் வெண்டளையாமென்றவாறு.ஒண்சீரகவலென்றுசிறப்பித்
தவதனால்ஆசிரியவுரிச்சீர்நின்றுபிறிதாகிவருஞ்சீர்முதலசையோ
டொன்றாததூஉமியற்சீர்வெண்டளையே சிறப்பின்றாயினுமென
க்கொள்க. ஒண்ணுதலென்பது மகடூஉ முன்னிலை-என்னை-வெண்
சீரொன்றலு மியற்சீர்விகற்பமு-மொன்றிரண்டென்ப வெண்ட
ளைக்கியல்பே- சீரொடுசீர் தலைப்பெய்வது தளையவை, யேழென
மொழிபரியல்புணர்ந்தோரே-ஈரசைச்சீர்நின்றினிவருஞ்சீரொடு
நேரசையொன்ற னிரையசை யொன்றலென்-றாயிருவகைத்தே
யாசிரியத்தளை- இயற்சீரிரண்டுந் தலைப்பெயறம்முள்-விகற்பமி
லவாட்விரவிநடட்பி-னதன்பெயராசிரியத்தளையாகும்-இயற்சீரி
ரண்டுந்தலைப்பெயற்ம்முள் விகற்பவகையது வெண்டளையாகும்
உரிச்சீர் தனு ளொத்ததையன்றிக் - கலக்குந்தளையெனக்கண்

டிசினோரே-வெண்சீரிறுதிக் கிணையசைபின்வரக் -கண்டனை - வ
ல்லாங் கலித்தளையாகும்-தன்சீரிரண்டுந் தலைப்பெயறம்முளோ
த்-தோன்றினுமொன்று தொழியினும்வஞ்சி யின்-பந்தமெனப்
பெயர் பகரப்படுமே-என்றார் காக்கைப்பாடினி யாருமெனக்
கொள்க. .... (௮)

திருமழையுள்ளாரகவல்சிலைவிலங்காகும்வெள்ளை...... ....*
மருளறுவஞ்சிமந்தாநிலம்வந்துமைதீர்கலியின் .... *
றெரிவுறுபந்தநல்லாய்செல்வப்போர்க்கதக்கண்ணனென்ப
துரிமையின் கண்ணின்மையோரசைச்சீருக்குதாரணமே*

(என்பது-) இக்காரிகையத்தளை களான்வந்த விலக்கியங்களை
முதனினைப்புணர்த்துதனுதலிற்று. திருமழையுள்ளாரகவலென்
பதுதிருமழைதலைஇயவிருணிறவிசும்பின் விண்ணதிரிமிழிசை
கடுப்பப்பண்ணமைத்தவர்தேர்சென்றவாறே. இதுநிரையொன்
றாசிரியத்தளையான் வந்தசெய்யுள். உள்ளார்கொல்லோ தோழி
முள்ளுடையலங்குகுலையீந்திற்சிலம்பி பொதிசெங்காய் துகில்
பொதிபவளமேய்க்குமகில்படுகள்ளியங் காடிறந்தோரே. இது
நேரொன் றாசிரியத்தளையான் வந்தசெய்யுள். சிலைவிலங்காகும்
வெள்ளையென்பது சிலைவிலங்குநீள்புருவஞ் சென்றொசியநோ
க்கி முலைவிலக்கிற்றென்று முனிவாண்-மலைவிலங்கு தார்மாலை
மார்பதனிமைபொறுக்குமோ கார்மாலைகண்கூடும்போது இது
வெண்சீர்வெண்டளையானுமியற்சீர் வெண்டளையானும்வந்தசெ
ய்யுள். மருளறுவஞ்சி மந்தாநிலம் வந்தென்பது மந்தாநிலம
ருங்கசைப்பவெண்சாமரை புடைபெயர்தரச் செந்தாமரை நா
ண்மலர்மிசை யெனவாங்கினிதிறைதுங்கிய விறைவனை மன
மொழி மெய்களின்வணங்குதும் மகிழ்ந்தே இதுமயக்கறவருத்
தவஞ்சித்தளை யொன்றியதூஉ மொன்றாததூஉமாக வந்தசெய்
யுள். மைதீர்கலியின் றெரிவுறுபந்தநல்லாய் செல்வப்போர்க்க
தக்கண்ணனென்பது செல்வப்போர்க்கதக்கண்ணன் செயிர்த்
தெறிந்தசின்வாழிமுல்லைத்தார்மறமன்னர்முடித்தலையை முருக்
கிப்போய் எல்லைநீர்வியன்கொண் மூவிடைநுழையுமதியம்போ
லமல்லலோங்கெழில்யானை .மருமம்பாய்ந்தொளித்ததே- இது
மயக்கமில்லாக் கலித்தளையான்வந்தசெய்யுள்- நல்லாயென்பது
மகடூஉமுன்னிலை உரிமையின் கண்ணின்மை யோரசைச்சீருக்
குதாரணமென்பது உரிமையின்கண்ணின்மையாலரிமதர்மழை
க்கணாள் செருமதிசெய்தீமையாற் பெருமை தொன்றவென்ப
வே. இம்முச்சீரடிவஞ்சி விருத்தத்துண்மழையென்னு மசைச்
சீரியற்சீர்போல நின்றுவருஞ்சீர்முதலசையோடொன்றுமை

ரோடுகூடி நீடுமோடைநெற்றி - வெங்கண்யானைவேந்தர்போந்து நாதகீதவென்றுதாழவங்கபூர்வ மாதியாயநாதி நூலினீதியோது மாதியாய் செங்கண்மாலை காலைமாலைசென்றுசேர்வர்சோதிசேர்ந்தசித்திதானே இது பதின்சீர்க்கழிநெடிலடியான்வந்தசெய்யுள் மற்றுமென்பதனாற் பதின்சீரின்மிக்கு வருவனவுமுளஅவை யாப்பருங்கல விருத்தியுட்கண்டுகொள்க காரிகைகவான்மருட்பேர்முலைமாதர் எ-து மகடூஉமுன்னிலை விரிக்கு நெடிலடியென்றுசிறப்பித்தவதனால் ஒருசாராசிரியர்எண்சீரின்மிக்கசீரால்வருஞ்செய்யுட்க ளச்சிறப்பிலவெனக்கொள்க வென்று சொல்லியதறிவித்தற்கெனக்கொள்க. என்னை. இரண்டுமுதலாவெட்டீறாகத்-திரண்டசீரானடிமுடிவுடைய-விறந்தவரினுமடிமுடிவுடைய-சிறந்தவல்லசெட்யுளுள்ளே-என்றார்காக்கைபாடினியார்.()

வெள்ளைக்கிரண்டடிவஞ்சிக்குமூன்றடிமூன்றகவற் .... *
கெள்ளப்படாக் கலிக்கீரிரண்டாகுமிழிபுரைப்போ ... .*
(ள்ளக்கருத்தினளவேபெருமையொண்போதலைத்த.... *
கள்ளக்கருநெடுங்கட்சுரிமென்குழற்காரிகையே ....*

(எ-து,)(இக்காரிகை)அவ்வடிவரையறையான்வந்தநான்கு பாவிற்குஞ்சிறுமைபெருமைபுணர்த்துதனுதலிற்று.வெள்ளைக்கிரண்டடி(எ-து,) வெண்பாவிற்கிரண்டடியே சிறுமை எ-று) வஞ்சிக்குமூன்றடி எ-துவஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை(எ-று,) மூன்றகவற்கு (எ - து) ஆசிரியப்பாவிற்கு மூன்றடியேசிறுமை (எ-று)எள்ளப்படாக்கலிக்கீரிரண்டாகும்(எ-து) கலிப்பாவிற்கு நான்கடியேசிறுமை (எ-று.) இழிபு (எ-து)நான்குபாவிற்குஞ்சிறுமை(எ-று)உரைப்போருள்ளக்கருத்தினளவே பெருமை (எ-து) நான்குபாவிற்கும் பெருமைக்கெல்லை பாடுவோனதுபொருண்முடிவுகருதிப்பேவரையறையில்லை எ-று)ஒண்போதலைத்த கள்ளக்கருநெடுங்கட்சுரிமென்குழற்காரிகையே(எ-து.) மகடூஉ- முன்னிலைஎள்ளப்படாக்கலிக்கென்றுசிறப்பித்தவதனாற்றுள்ளலோசையிற்சிறிதுவழுவாதுநாற்சீர்நாலடியான்வருவதுதரவுகொச்சகக்கலிப்பாவென்றுந் துள்ளலோசையிற்சிறிது வழுவிநாற்சீர்நாலடியான் வருவதுகலிவிருத்தமென்றுந்தெரிந்துணரப்படுமெனக்கொள்க. வெள்ளைக்கிரண்டாமகவற்குமூன்றுகலிக்கடி நான்கெள்ளப்படா வஞ்சிப்பாவிற்கு மூன்றுமிழிபென்றுபாக்களைமுறைமையிற் கூறுதலைதடுமாற்றமாகக்காரிகை சொல்லவேண்டிய தென்னையோவெனின் தலைதடுமாற்றந் தந்துபுணர்ந்துரைத்தலென்னுந் தந்திரவுத்தியாகலின் மயேசுரர்முதலா வொருசாராசிரியர் வஞ்சிப்பாவிரண்டடியானும்வர

ப்பெறுமென்றுரொன்பதறி விற்றற்கென்ப தூஉ மாசிரியப்பா
வீரைண்டடிச்சுருதகமாய் வரப்பெறுமென்றுரொன்ப தறிவித்த
ற்கென்ப தூஉ மெனக்கொள்க. என்னை-வெண்பாவாசிரியங்கலி
யேவஞ்சியென நுண்பாவுணர்ந்தோர் நுவலுங்காலையிரண்டுமூ
ன்றுநான்குமிரண்டுந் திரண்டவடியின் சிறுமைக்கெல்லை என்
றெடுத்தோதிய மயேசுவரர்வஞ்சிச் சிறுமைக்குக்காட்டும்பாட்
டும் பூந்தண்சிலைமலர்மல்கியபொழிற் பிண்டிவேந்தன் புகழ்
பரவாதவர்வினை வெல்லாரதனால் அறிவனதடியிணைபரவிப்பெ
றுகுவர்யாவரும்பிறவியினெறியே இதனைமுச்சீரடிவஞ்சியாக
வலகட்டுக்கொள்க ஒருதொடையீரடி வெண்பாச்சிறுமை யி
ருதொடை மூன்று மடியினிழிந்து வருவன வாசிரிய மில்
லைமொழிய வஞ்சியமப்பா வழக்கினவாகும்நான்கா மடியி
னுமூன்றுந்தொடையினுந் தாழ்ந்து கலிப்பாதநுவுதலில்லே
உலாப்போர் குறிப்பினை நீக்கிப் பெருமை வரைத்தித்தினை
யெனவைத்துரையிலென் றுரைத்தனர்மாதோ வுணர்ந் திசி
னோரே என்றார்காக்கைபாடினியாருமெனக்கொள்க. (௰௪)

அறத்தாறிதுவெனவெள்ளைக்கிழிபகவற்கிழிபு ... . [ன்
குறித்தாங்குளாப்பின் முதுக்குறைந்தாங்குறையாக்கலியி
திறத்தாறிதுசெல்வப்போர்ச்செங்கண் மேதிவஞ்சிச்சிறு
மை,புறத்தாழ்கருமென்குழற்றிருவேயன்னபூங்கொடியே.

என்பது. இக்காரிகை - அவ்வடிவரையறையான் வந்த நான்
குபாவிற்குஞ் சிறுமைக்குக்காட்டிய விலக்கியங்கட்குமுதனினை
ப்புணர்த்துதனுதலிற்று. அறத்தாறிதுவென வெள்ளைக்கிழிபு
(எ-து) அறத்தாறிதுவென வேண்டாசிவிகை-பொறுத்தானோடு
ர்ந்தானிடை- இஃதிரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமை
வந்தவாறு அகவற்கிழிபுகுறித்தாங்குளாப்பின் முதுக்குறைந்தா
ங்கு(எ-து.முதுக்குறைந்தனளே முதுக்குறைந்தனளே மலைய
னொள்வேற்கண்ணி முலையும்வாரா முதுக்குறைந்தனளே இது
மூன்றடியாசிரியப்பாவிற்குச்சிறுமைவந்தவாறு.குறையாக்கலி
யின்றிறத்தாறிது செல்வப்போர் (எ. து) செல்வப்போர்க்கத
க்கண்ணன் - மருமப்பாய்ந்தொளித்ததே - இதுநான்கடியாற்
கலிப்பாவிற்குச் சிறுமைவந்தவாறு.செங்கண்மேதிவஞ்சிச்சிறு
மை (எ-து) செங்கண்மேதிகருப்புகழ்க்கி யங்கணிலத்தலருந்
திப்பொழிற் காஞ்சிநிழற்றுயிலுஞ்செழுநீர்நல்வயற்கழனியூர
ன்புகழ்தலானுப் பெருவண்மையனே. இது மூன்றடி யான்வ
ஞ்சி பாவிற்குச்சிறுமை வந்தவாறு. புறத்தாழ்கருமென்குழ
ற்றிருவேயன்னபூங்கொடியே.(எ-து,) மகடூஉமுன்னிலை. (௰௫)

எழுவாயெழுத்தொன்றின்மோனையிறுதியியைபிரண்டாம்
வழுவாவெழுத்தொன்றின்மாதேயெதுகைமறுதலைத்த *
மொழியான்வரினுமுரணடிதோறுமுதன்மொழிக்கண் *
ணழியாதளபெடுத்தொன்றுவதாகுமளபெடையே .... *

(எ-து,)-இக்காரிகை-அடி மோனை யிணைமோனை பொழிப்பு மோனை ஒரூஉமோனை கூழைமோனை மேற்கதுவாய் மோனை கீழ்க்கதுவாய் மோனை முற்று மோனை எனவும். அடியியைபு இணையியைபு - பொழிப்பியைபு ஒரூ வியைபு - கூழையியைபு மேற்கதுவாயியைபு- கீழ்க்கதுவாயியைபு-முற்றியைபு எ,ம். அடியெதுகை இணையெதுகைபொழிப்பெதுகை- ஒரூஉவெதுகை கூழையெதுகை - மேற்கதுவாயெதுகை - கீழ்க் கதுவாயெதுகை - முற்றெதுகை - எ-ம். அடிமுரண்-இணைமுரண்-பொழிப்புமுரண் - ஒரூஉ முரண் கூழைமுரண் - மேற்கதுவாய் முரண். கீழ்க்கதுவாய்முரண் - முற்றுமுரண். (எ,ம்.) அடியள பெடை - இணையளபெடை- பொழிப்பளபெடைஒரூஉவளபெடை கூழையளபெடை- மேற்கதுவாயளபெடை - கீழ்க்கதுவாயளபெடை-முற்றளபெடை - (எ-ம்.) அந்தாதித்தொடைஇரட்டைத்தொடை செந்தொடை (எ-ம்.) கிடந்ததொடையுந்தொடை விகற்பமு மாமாறுணர்த்துவா னெடுத்துக்கொண்டா ரவற்றுளிக்காரிகை அடிமோனையுமடியியைபு மடியெதுகையு மடிமுரணு மடியளபெடையு மாமாறுணர்த்துதனுதலிற்று எழுவாயெழுத்தொன்றின்மோனை (எ-து) அடிதொறுமுதலெழுத்தொன்றிவரத்தொடுப்பது அடிமோனைத்தொடையெனப்படும். (எ-று.) எழுவாயெனினு மாதியெனினுமுதலெனினுமொக்கும், மோனையெனினு முதற்றொடை யெனினுமொக்கும் இறுதியியைபு- (எ-து,) அடிதொறுமிறுதிக்கணின்ற வெழுத்தானுஞ்சொல்லானு மொன்றிவரத்தொடுப்ப தடி யியைபுத் தொடையெனப்படும் (எ-று.) இரண்டாம்வழுவா வெழுத்தொன்றின்மாதேயெதுகை (எ-து.) அடிதொறுமுதற் கண்ணிரண்டாமெழுத்தொன்றி வரத்தொடுப்ப தடியெதுகைத் தொடை யெனப்படும். (எ-று மாதே எ-து, மகடூஉமுன்னிலை இரண்டாமெழுத்தொன்றினெதுகையென்றது வழுவாவெழுத்தென் றுமிகுத்துச்சொல்லிய வதனாலிரண்டாமெழுத்தொன்றி வரினுமுதலெழுத்தெல்லாந் தம்முளொத்தவாயினவாய்ந்து கட்டென்பதற்குப் பட்டென்பதல்லது பாட்டென்பதெதுகையாகா காட்டென்பதற்குப்பாட்டென்பதல்லது பட்டென்பதெதுகையாகாதெனக்கொள்க. மறுதலைத்தமொழியான் வரினு முர

ண் (எ-று) அடிதோறுமுதற் சட்சொல்லானும் பொருளானு மறுதலைப்படத் தொடுப்பதடி முரண்டொடை யெனப்படும். (எ-று.) மொழியான்வரினு மென்ற வும்மை யான் பொருளான் வரினுமென்பதாயிற்று. அடிதொறும் எ-து, மத்திமதீபமெனக்கொள்க. முதன்மொழிக்கண்ணொழியாதளபெடுத்தொன்றுவதாகு மளபெடையே எ-து, அடிதோறுமுதன் மொழிக்கணுயிரானும் மொற்றானுமளபெடுத் தோன்றிவரத் தொடுப்பதடியளபெடைத்தொடையெனப்படு மென்றவாறு. அழியாதென்று மிகுத்துச்சொல்லிய வதனால் நான் குயிரளபெடையுமிரண்டொற்றள பெடையுந்தம்மு ளொன்றிவரத்தொடுப்பதுசிறப்புடைத்து. தொடைவிகற்பத்துக் குநான் குயிரளபெடையுமிரண்டொற்றளபெடையும் தம்முண் மறுதலைப்படத் தொடுப்பினு மிழுக்காது அவற்றுள் முதலெழுத்தொன்றின் மோனையெதுகை முதலெழுத்தளவோ டொத்தது முதலா வஃதொழித்தொன்றினுமென்ப என்றார்பலகாயனார் யிறுவாயொப்பினஃதியையெனமொழிப என்றார் - கையனார் மொழியினும்பொருளினு முரணுதன் முரணே-என்றார் - தொல்காப்பியனார் அளபெடைத்தொடைக்கே யளபெடையொன்றும் - என்றார் நற்றத்தனார்.. (யசா)

அந்தமுதலாத்தொடுப்பதந்த தியடிமுழுதும்..... .... *
வந்தமொழியேவருவதிரட்டைவரன்முறையான்....... *
முந்தியமோனை முதல முழுதுமொவ்வா துவிட்டாற் .. *
செந்தொடைநாமம்பெறுநறுமென்சொற்றேமொழியே

(எ-து,) இக்காரிகை-அந்தாதித்தொடையு -மிரட்டைத்தொடையுஞ் செந்தொடையு மாமாறுணர்த்துத லுதலிற்று அந்தமுதலாத் தொடுப்ப தந்தாதி (எ-து,) அடிதொறு மிறுதிக்கணின்ற வெழுத்தானு மசையானுஞ் சீரானுமடியானு - மற்றையடிக்காதியாகத் தொடுப்பதந்தாதித் தொடையெனப்படுமென்றவாறு-அடிமுழுதும்வந்தமொழியே வருவதிரட்டைவரன்முறையான் (எ-து,) ஓரடிமுழுதுமொருசொல்லே வரத்தொடுப்பது இரட்டைத்தொடையெனப்படும். (எ-று.) வரன்முறையானென்று மிகுத்துச்சொல்லியவதனா லீற்றெழுத்தொன்றுகுறையினு மிழுக்காது - நற்சீரின் மிக்குவரப் பெறு மெனக்கொள்க. முந்தியமோனை முதலா முழுதுமொவ்வாது விட்டாற்செந்தொடை நாமம்பெறும். (எ-து) மோனை முதலான தொடையுந் தொடைவிகற்பமும் போலாமை வேறுபடத்தொடுப்பதுசெந்தொடையெனப்படுமென்றவாறு. முந்திய மோனை

யென்று சிறப்பித்த வகையால்அசையுஞ்சீரும்தம்முண் மறுதலை
ப்படத்தொடுப்பதுசிறப்புடைத்தெனக்கொள்க, நறுமென்குழ
ற்றேமொழியே (எ-று,) மகடூஉமுன்னிலை- என்னை-அடியுஞ்
சீருமசையு மெழுத்து-முடிவுமுதலாச்செயுஞ்மொழியினஃதந்
தாஙித்தொடையென்றறைதல்வேண்டும்-என்றார்-நற்றத்தனார்-ஒ
ருசொல்லடிமுழுதும்வருவதிரட்டை - என்றார்-மயேசுரர்- சொ
ல்லிய தொடையொடு வேறுபட்டியலிற் சொல்லிய புலவரது
செந்தொடையென்ப என்றார் - தொல்காப்பியனார் - அசையி
னுஞ்சீரினு -மிசையினுமெல்லா - மிசையா தாவது செந்
தொடைதானே-என்றார்-கையனார்......... ....(௰௭)

மாவும்புண்மோனையிணையிணைகவடியேமொழுகைக் *
கேவின்முரணுமிருள்பரந்தீண்டளபாவளிய .... *
வோவிலந்தாதியுலகுடனுமொக்குமேயிரட்டைப்..... .... *
பாவருஞ்செந்தொடைபூத்தவென்றுகும்பணிமொழியே*

(எ-று.) இக்காரிகை, அடிமோனைமுதலாகியதொடைகளா
ன்வந்த விலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்துதலுதலிற்று
(மாவும்புண்மோனை) (எ-து,) மாவும்புள்ளும்வதுவை யிற்படர
மாநீர்விரிந்த பூவுங்கூம்பமாலைதொடுத்த கோதையுங்கமழமா
லைவந்த வாடை மாயோனின்னுயிர்ப் புறத்திறுத்தற்றே இஃ
தடிதோறுமுதலெழுத்தொன்றிவரத்தொடுத்தமையி னடிமோ
னைத்தொடை (எ-று.) இணைபிணை (எ-து,) இன்னகைத் து
வர்வாய்க்-கிளவிபுமணங்கே- நன்மாமேனிச் சுணங்குமணங்
கே-யாடமைத்தோளி கூடலுமணங்கே. அரிமதர்மழைக்கண்ணு
மணங்கேதிருநுதற்பொறித்ததிலதமுமணங்கே-இஃதடிதோறு
மிறுதியொன்றி -வரத்தொடுத்தமையா னடியிணைபுத்தொடை
(எ-று-)வடியேமொழுகை (எ-து,) வடியேர்கண்ணீர்மல்கவான்
பொருட்கட்சென்றார் சுடியார்சுணங்குழாய் காணார்கொல்காட்
டிணிடியின்முழக்கஞ்சிபிர்ங்கவுள்வேழம் பிடியின்புறத்திசைத்த
கைஇஃதடிதோறு மிரண்டாமெழுத்தொன்றிவரத் தொடுத்த
மையானடியெதுகைத்தொடை(எ-று.)எவின்முரணுமிருள்பரந்
து(எ-து,)இருள்பரந்தன்னமாநீர்மருங்கினிலவுகுவித்தன்னவெ
ண்மணலொரு சிறை யிரும்பினன்னகருங் கோட்டுப் புன்னை
பொன்னின்னநுண்டாதுறைக்குஞ் சிறுகுடிப்பரதவர்மடமக
ள்பெருமதாமழைக்கணுமுடைய வாலணங்கே-இஃதடிதோ
றுமுதற்கண்ணே மறுதலைப்படத் தொடுத்தமையானடிமுரண்
தொடை (எ-று.) அளபாவளிய (எ-து,) ஆஅவளியவலவன்ற
ன்பார்ப்பினோடிரிரையுந் தொண்டூஉமோப்பள்ளிபுட் டேஉர்தி
வாயலைப்பத்துஞ் சாதிறைவன்றேஎன்மேன்வலைப்பட்டநப்போ

ணறு நுதாலோ ஒலவுழக்குந்துயர் இஃதடிதோறு முதற்கண்ணேயளபெடுத்தொன்றி வரத்தொடுத்தமையானடியளபெடைத்தொடை (எ-று.) ஒலியந்தாதியுக்குடனு மொக்கும் (எ-து,) உலகுடன் விளக்கு மொளிதிகழவிர்மதியத்திநலமழிக்கும்வளங்கெழு முக்குடை முக்குடை நீழற்பொற்புடை யாசனமாசனத்திருந்த திருந்தொளியறிவனை யறிவுசேருள்ளமோடிருந்த வட்புரிந்து துன்னியமாந்தரஃதென்ப பன்னருஞ்சிறப்பின் விண்மிசையுலகே. இஃது நான்கந்தாதியும்வந்தசெய்யுள் ஒக்குமேயிரட்டை (எ-து,) ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும் விளக்கினிற் சீறெரியொக்குமே யொக்கும் குளக்கொட்டிப்பூவினிறம் இஃதோரடிமுழுதுமொருசொல்லேவரத்தொடுத்தமையாலிரட்டைத்தொடை எ-று இறுதிச்சீரேகாரத்தாற்குறைபட்டதாயினுமிழுக்காது இது நாற்சீரின்மிக்குவரப்பெறுதெனக்கொள்க. யாவருஞ்செந்தொடைபூத்தவென்றுகும் (-எ-து) பூத்தவேங்கைகவியன்சினையேறி மயிலினமகவு நாடனன்னுதற்கொடிச்சி மனத்தகத்தோனே இதுமோனைமுதலாகியதொடையுந்தொடைவிகற்பமும் போலாதுவேறுபடத்தொடுத்தமையாற்செந்தொடை (எ-று.) யணிமொழியே (எ-து,) மகடூஉ முன்னிலை; ... ...-(௰௮)

இருசீர்மிசையிணையாகும்பொழிப்பிடையிட்டொருவா *
யிருசீரிடையிட்ட கூழைமுதலிறுவாய் .... *
வருசீரயலிலமேல்கீழ்வகுத்தமைகீழ்கதுவாய்............ *
வருசீர்முழுவதுமொன்றின்முற்றுமெய்யமற்றவையே *

(எ-து) இக்காரிகை, இணைமோனைமுதலாகியமுப்பத்தைந்து தொடைவிகற்பமுமாமாறுணர்த்துதனுதலிற்று (எ-று) இருசீர்மிசையிணையாகும் (எ-து,) முதலிருசீர்க்கண்ணுமோனைமுதலாகியவைந்தும்வரத்தொடுப்பதிணைமோனையெனப்படும் (எ-று) பொழிப்பிடையிட்டு (எ-து!) முதற்சீர்க்கண்ணுமூன்றாஞ்சீர்க்கண்ணுமோனைமுதலாகியவைந்தும்வரத்தொடுப்பதுபொழிப்பெனப்படும் (எ-று.) ஒருவாயிருசீரிடையிட்டது (எ-து) நடுவிருசீர்க்கண்ணுமின்றிமுதற்சீர்க்கண்ணுமீற்றுச்சீர்க்கண்ணுமோனைமுதலாகியவைந்தும்வரத்தொடுப்பதுஒரூஉவெனப்படும். எ-று. கூழை (எ-து!) இறுதிச்சீர்க்கணின்றியொழிந்தமூன்றுசீர்க்கண்ணுமோனைமுதலாகியவைந்தும்வரத்தொடுப்பதுகூழை. எ-று. முதலிறுவாய்வருசீரயலிலமேல்கீழ்வகுத்தமைகீழ்கதுவாய்-எ-து, முதலயற்சீர்க்கணின்றியொழிந்தமூன்றுசீர்க்கண்ணுமோனைமுதலாகியவைந்தும் வரத்தொடுப்பது மேற்கதுவாயென்றுமீற்றயற்சீர்க்கணின்றியொழிந்தமூன்றுசீர்க்கண்ணுமோனைமுதலாகியவைந்தும்வரத்தொடுப்பது கீழ்க்கதுவாயென்றும் வழங்கப்படும்-எ-று-

இதுநிரனிறையெனக்கொள்க. கடையயன்முதலயல்கதுவாய்கீழ்
மேலென்றாரவிநயனார்முதலயற்சீர்க்கணில்லாததனைக்கீழ்க்கதுவா
யென்றும் ஈற்றயற்சீர்க்கணில்லாததனைமேற்கதுவாயென்றும்வே
ண்டினார்கையனார் முதலாகியவொருசாராசிரியரென்பதறிவித்தற்
குறைதீர்கதுவாயென்றுவிதப்புணர்த்தாரென்க (என்னை) விதப்புக்
கிளவிவேண்டியது விளக்கும் என்றாராகலின் - வருசீர் முழுவது
மொன்றின்முற்றுமென்ப (எ-று.) நான்குசீர்க்கண்ணுமோனைமு
தலாயினவைந்தும்வரத்தொடுப்பதுமுற்றெனப்படும் (எ-று) மற்
றவையே (எ-து,) இறுதிவிளக்கெனக்கொள்க. சீர்முழுதுமொன்
றின்முற்றுமென்றதுவருசீரொன்றசிறப்பித்தவதனால் இணைமோ
னைமுதலாகியமுப்பத்தைந்து தொடைவிகற்பமுமளவடிக்கண்
ணே இவ்வாறு வழங்கப்படுமென்பதூஉம் இணையியைபு முதலா
கியவேழுவிகற்பமுமிறுதிச்சீர்முதற்சீராகக்கொண்டுவழங்கப்ப
டுமென்பதூஉங்கொள்க. இயைபுத்தொடைக்கேழுவிகற்பமுமிறு
திச்சீர்முதலாகக்காட்டினார்கையனார்முதலாகியவொருசாராசிரிய
ரெனக்கொள்க. (என்னை) இருசீர்மிசைவரத்தொடுப்ப திணையேமு
தலொழிமூன்றுஞ் சீர்த்தொடைபொழிப்பே சீரிரண்டிடைவிடத்
தொடுப்பதொரூஉத்தொடை மூவொருசீருமுதல்வரத்தொடுப்
பது கூழையென்மனார் குறிப்புணர்ந்தோரே. முதலயற்சீரொழித்
தல்லன மூன்றுமிசைவரத்தொடுப்பது மேற்கதுவாயே ஈற்றயற்
சீரொழித்தெல்லாந்தொடுப்பது கீழ்க்கதுவாயின கிழமையதாகு
ம். சீர்தொறுந்தொடுப்பதுமுற்றெனப்படுமே எ-ம். மோனையெ
துகைமுரணியைபளபெடை - யாதமிணையேபொழிப்போடொ
ரூஉத்தொடைகூழைகதுவாய் மிசையதூஉங்கீழதூஉஞ்சீரியமு
ற்றொடுசிவணுமாரவையே என்பதியாப்பருங்கலம் ....(௰௧)

மோனைவிகற்ப மணிமலர்மொய்த்துடனுமிசையிற் .... *
கேனையெதுகைக்கினம்பொன்னினல்லவிளமுரணித் *
தானவிகற்பமுஞ்சிறடிப்பேரதளபெடையின்... ...... --*
றானவிகற்பமுந்தொட்டாமனையென்பதார்குழலே ...... *

எ-து-இக்காரிகையிணைமோனைமுதலாகிய முப்பத்தைந்துதொ
டைவிகற்பங்களெல்லாந்தவிலக்கியங்கட்குமுதனினைப்புணர்த்துக
ணுதலிற்று மோனைவிகற்பமணிமலர் எ-து, அணிமலரசோகின்றளி
ர்நலங்கவற்றியரித்தரத்தெண்கிணியரற்றுஞ்சீறடியம்பொற்கொ
டிஞ்சிநெடுந்தேரகற்றி யகன்றவல்குலைய நுண்மருங்குலம்பிய
கொங்கைபவ்வளைப்பமைத்தோளவிர்மதியனையதிருநுதலரிவையயி
ல்வேலனுக்கியம்பலேச்சமர்ந்தகருங்காவெனடுங்கணேச்கமென்றி
ருந்தியகிந்தையைத்திறைகொண்டனவே இதனுளிணைமோனைமு
தலாகியவேழுவிகற்பங்களுமுறையானே வந்தவாறுகண்டுகொள்

க. மொய்த்துடனுடைவினையபிற்கு(எ-து)மொய்த்துடன்றவழு முகிலேபொழிலேமற்றகனையலே முத்துறழ்மணலே நிழலேயினியதுனையல்துக்கடலேமாதர் நகிலேவல்லேயியலே-வில்லேநுதலே வேற்கண்கயலே-பல்லேகவளம்பாலேசொல்லே-புயலேகுழலேமயிலேயியலே-யதனு-விவ்வயினிவ்வுருவயங்கலினெவ்வயினோருமிழப்பர்சந்நிறையே. இதனு ளிணையியைபுமுதலியவேழுவிகற்பங்களுமுறையானேவந்தவாறு கண்டுகொள்க. எனையெதுகைக்கினம் பொன்னினன்ன(எ-து) பொன்னினன்னபொறிச்சுணங்கேந்திப் பன்னருங்கோங்கினன்னலங்கவற்றி மின்னிவரொளிவடந்தாங்கி மன்னியநன்னிறமென்முலைமின்னிடை வருத்தியென்னையு மிடுக்கண்டுன்னிவித்தின்னடை யன்னமென்பெடைபோலப் பன்மலர்க்கன்னியப்புன்னையின் னீழற் றுன்னியமயிலெச்சாயல் வாணுதலபில்லேவனுண்க ணெம்மறிவுதொலைத்தனவே- இதனு ளிணையெதுகைமுதலாகியவேழுவிகற்பமுமுறையானே வந்தவாறுகண்டுகொள்க. இனிமுரணிற்கானவிகற்பமுஞ் சிறடிப்பேரது(எ-து) சீறடிப்பேரகலல்குலோல்குபுசுருங்கிய நுசுப்பிற்பெருகுவடந்தாங்கிக்குவிந்துசுணங்கரும்பியகொங்கைவிரிந்தசிறியபெரிய நிகர்மலர்க்கோதைதன் வெள்வளைத்தோளுஞ் சேயரிக்கருங்கணு மிருகையுநிலையுமேற்கெழிலியக்கமுந் துவர்வாய்த்தீஞ்சொலுமுவந்தெனைமுனிபாதென்றுமின்னணமாகு மதிபோன்றிகழ்நெடுவேற்போர்வல்லோயே. இதனு ளிணைமுரண்முதலாகியவேழுவிகற்பமுமுறையானே வந்தவாறுகண்டுகொள்க. அளபெடையின்றனைவிகற்பமுந்தா அட்டாமரையென்ப(எ-து) தாஅட்டாஅமரை மலருழக்கியபூஉக்குவளைப்போஒ தருந்திக்காஅய்ச்செந்நெற் கதிர்துப்போஒய்மா அத்தாஅண்மோஒட்டெருமை தேஎம்புனலிடைச்சோஒர்பாஅனமீஇனு அர்ந்துகளுஞ் சீஇரோஎருஅநீஇனீஇரூரன்செய்தகேண்மையாய்வளைத்தோஒளிக்கலராகுமே. இதனு ளிணையளபெடைமுதலாகியவேழுவிகற்பமுமுறையானேவந்தவாறுகண்டுகொள்க. தானவிகற்பமென்று சிறப்பித்தது இரண்டளபெடையும்வரப்பெறும் வரிற்றம்முண்மயங்காதேவரவேண்டுமாதலின் தாழ்குழலேள-துமகடூஉமுன்னிலைஉறுப்பியல்முற்றும்

கந்தமுந்தேனுஞ்சுரக்கமுங்காதற்குறில்குறிலே... ... ...*
சந்தமுந்திரைசந்தமாந்தண்குன்றந்தண்சீர்திருவும்... ...*
கொந்தவிழ்க்கோதாய்குறடிணைவெள்ளைக்கறத்தெழுவா... *
யந்தமுமாவுநிருசீருமோனையுமாமுறுப்பே ... .*

(எ-து) இக்காரிகை யுறுப்பியற் செய்யுளிருபதுக்கு முதனினைப்புணர்த்தியது.

இரண்டாவது

செய்யுளியல்

வெண்பாவகல்கலிப்பாவளவடிவஞ்சியென்று... ....*
மொண்பாவடிகுறள்சிந்தென்றுரைப்பவொலிமுறையே *
திண்பாமலிசெப்பல்சீர்சாலகவல்சென்றோங்குதுள்ள ....*
லண்பாவமைந்தநலமிகுதூங்கலாறுநுதலே..... .... *

[இதன்பொருள்,]

(இக்காரிகை) இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின் வெண்பா-வெள்ளொத்தாழிசை-வெண்டுறை வெளிவிருத்தம் ஆசிரியப்பா - ஆசிரியத்தாழிசை - ஆசிரியத்துறை - ஆசிரிய விருத்தம்- கலிப்பா - கலித்தாழிசை -கலித்துறை -கலிவிருத்தம்-வஞ்சிப்பா - வஞ்சித்தாழிசை - வஞ்சித்துறை- வஞ்சிவிருத்தம்-மருட்பாவெனக்கிடந்த செய்யுட்களை யாமாறுணர்த்திற்றாகலாற்செய்யுளோத்தென்னும் பெயர்த்து இவ்வோத்தினு ளிக்காரிகையென்னுதலிற்றோவெனின் - வெண்பா வாசிரியங் கலிவஞ்சியென்னும் நான்குபாவிற்கு மடியுமோசையு மாமாறுணர்த்துதனுதலிற்று. வெண்பாவகவல் கலிப்பாவளவடி யென்பது-வெண்பாவு மாசிரியப்பாவும் - கலிப்பாவும் நாற்சீரோரடி யான்வரப்பெறுமென்றவாறு. வஞ்சியென்று மொண்பாவடி குறள்சிந்தென்றுரைப்ப-வென்பது - வஞ்சிப்பா விருசீரடியானு முச்சீரடியானும் - வருமென்றவாறு. வஞ்சியென்று மொண்பாவென்று சிறப்பித்தவதனால் வெண்பாவி னீற்றடியும் நேரிசையாசிரியப்பாவி னீற்றயலடியும்-கலிவெண்பாவி னீற்றடியு முச்சீரால் வருமெனவும் இணைக்குறளாசிரியப்பாவி னிடையடிக ளிரண்டும்-பலவுங்குறளடியானும் -சிந்தடியானும் வரப்பெறுமென்றும் ஒருசாரம்போதரங்க வுறுப்புமிருசீரடியானு முச்சீரடியானும்வருமாறறிக.அராகவுறுப்புக்க ணாற்சீரின்மிகுத்து வருவனவுமுளவெனக்கொள்க. அவைபோக்கித்தந்த மிலக்கணச் சூத்திரத்துள்ளோகாட்டுதும் (என்னை) கலியொடுவெண்பாவகவல்கூறி- னளவடிதன்னா னடக்குமற்றவையே. சிந்தடிகுறளடி - யென்றிரண்டடியான். வஞ்சிநடக்கும் வழக்கினையுடைய என்றாராகலின் ஒலிமுறையே திண்பாமலி செப்பல் சீர்சாலகவல்சென் றோங்குதுளவல் தண்பாவமைந்த நலமிகுதூங்கல் (எ-து,)வெண்பா செப்

டலோசையான் வரு மாசிரியப்பா வகவலோசையான் வரும். கலிப்பா துள்ளலோசையான்வரும். வஞ்சிப்பா தூங்கலோசையான்வரும். இனிவரு முதாரணத்திற் காண்க. நறுநுதலேயென்பது மகடூஉ முன்னிலை- தின்பாமலிசெப்பலென்று சிறப்பித்தவதனாற் செப்பலோசை மூன்றுவகைப்படும் ஏந்திசைச்செப்பலுந் தூங்கிசைச்செப்பலு மொழுகிசைச்செப்பலுமென்க. சீர்சாலகவலென்று சிறப்பித்தவதனால் அகவலோசை மூன்றுவகைப்படும். ஏந்திசை அகவலுந் தூங்கிசையகவலும் ஒழுகிசை யகவலுமென்க. சென்றேங்கு துள்ளலென்று சிறப்பித்தவதனால் துள்ளலோசை மூன்று வகைப்படுப்படும். ஏந்திசைத்துள்ளலும் அகவற்றுள்ளலும் பிரிந்திசைத் துள்ளலுமென்க. நலமிகு தூங்கலென்று சிறப்பித்தவதனால் தூங்கலோசைமூன்றுவகைப்படும் ஏந்திசைத் தூங்கலும் அகவற்றூங்கலும் பிரிந்திசைத்தூங்கலு மென்க. (என்னை) வெண்சீர்வெண்டளை யான்வரும்யாப்பை ஏந்திசைச்செப்பலென்மனார்புலவர். இயற்சீர்வெண்டளை யான்வரும்யாப்பைத். தூங்கிசைச்செப்பலென்மனார்புலவர். வெண்சீரொநலுமியற்சீர்விகற்பமும் ஒன்றியபாட்டே யொழுகிசைச்செப்பல். அவற்றிற்குச்செய்யுள்வருமாறு. யாதானும் நாடாமாலூராமாலென்னொருவன் - சாந்துணையுங்கல்லாதவாறு. இஃதேந்திசைச்செப்பல் பாலொடுதேனொன்பது தூங்கிசைச் செப்பல் பொன்னோ மார்பவென்பது ஒழுகிசைச்செப்பல் நேர்நேரியற்றளையான் வருமகவலு நிரைநிரை யியற்றளையான் வருமகவலுமா யிருளையுமொத்தாகிய வகவலு மேந்த றூங்கலொழுகலென்றிவையாய்ந்தநிரனிறையாகுமென்ப. அவற்றிற்குச் செய்யுள்வருமாறு போதுசாந்தம் (எ-து,) ஏந்திசையகவல் அணிநிழல் (எ-து,) தூங்கிசை அகவல் குன்றக்குறவன்(எ-து,) ஒழுகிசையகவல்ஏந்திசைத்துள்ளல் கலித்தளையிடையின் வெண்டளை தன்றளையென்றிரண்டிடையி னொன்றியகவற்றுள்ளலென்றே தூகதன்றளைபிறதளையென் றிவையனைத்தும் பொருந்திவரினே பிரிந்திசைத் துள்ளல். அவற்றிற்குச்செய்யுள் வருமாறு. முருகுமிழ் தாமரைமலர்மேன்முடியிமையோர்புடைவரவே வாசினர்நாதருமறை நூல்வழிபிழைபாமனமுடையார் இருவினைபோய்விழ்முரியாதெதிரியகாதிலயபெறியா நிருமலராயறிவினராய் நிலவுவர் சோதியினிடையே இஃதேந்திசைத்துள்ளல்செல்வப்போர்க(எ-து) அகவற்றுள்ளல்ட்ட நிலை(எ-து) பிரிந்திசைத்துள்ளல் ஒன்றியவஞ்சித்தளையேவரினு மொன்றாவஞ்சித்தளையேவரினு மென்றிவையிரண்டும் பிறவுமயங்கி னுமேற்தலகவல்பிரிந்திசைத்தூங்கலென்றுமேந்த நிரனிறை

யாகுமென்ப. அவற்றிற்குச்செய்யுள்வருமாறு. வினைத்திண்பகை விழச்செற்றவன் வனப்பங்கயமலர்த்தாளிணை நினைத்தன்பொடு தொழுதேத்துவார்நாளும் மயலாநாற்கதிமருவார்பெயராமேற் கதி பெறுகுவர்விரைந்தே இஃது எந்நிசைத் தூங்கல் வானோர் தொழவண்டாமரைத் தேனூர்மலர்மேல்வந்தருளாருவருங் கூறா நிலைக் காணார்மலர்கொண்டேத்தி வணங்குனர்பரைபுகழ்முத்தி பெறுகுவர்விரைந்தே-இஃது -அகவற்றூங்கல் மந்தாநில(எ-து) பிரிந்திசைத்தூங்கலான வந்தசெய்யுள் பிறவுமன்ன இதற்குவிதி யாப்பருங்கல-விருத்தியுட்கண்டுகொள்க. (௧)

வளம்படவென்பதுவெள்ளைக்ககவற்குதாரணஞ்செங் ...*
களம்படக்கொன்றுகலிக்கரிதாயகண்ணூர்கொடிபோற் .. *
றுளங்கிடைமாதேசுறமறிதொன்னலத்தின்புலம்பென். -*
றுளங்கொடுநாவலரோதினர்வஞ்சிக்குதாரணமே.......... *

